# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 317/2017 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 4 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. ராமகிருஷ்ணன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of July 2026.

நான் வடக்கு கள்ளிகுளத்தில் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி ரவிசந்திரனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெப்பங்கள் எதுவும் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. என் முன்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 03.03.2016 ஆம் தேதி மாலை 05.00 மணிக்கு சம்பவ இடமான மீனவன்குளம் பேருந்து நிறுத்தம் மற்றும் அதன் சுற்றுபுறங்களையும்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:00:22 +0530

களக்காடு காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையிலும், சாட்சி ரவிசந்திரன் என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.21 18:00:26 +0530

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 317/2017 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 3 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. ரவிச்சந்திரன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of July 2026.

நான் மீனவன்குளத்தில் கூலி வேலை பார்த்து வருகிறேன். சாட்சி ராமகிருஷ்ணனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெப்பங்கள் எதுவும் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. என் முன்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 03.03.2016 ஆம் தேதி மாலை 05.00 மணிக்கு சம்பவ இடமான மீனவன்குளம் பேருந்து நிறுத்தம் மற்றும் அதன் சுற்றுபுறங்களையும்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:00:34 +0530

களக்காடு காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையிலும், சாட்சி ராமகிருஷ்ணன் என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:00:38 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 317/2017 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 2 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு.ஜெனிட்டன் இஸ்ரவேல் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of July 2026.

நான் தற்போது ஏர்வாடி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு களக்காடு காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்தபோது 03.03.2016 ம் தேதி 14.00 மணிக்கு உதவி ஆய்வாளர் இராஜாராம் என்பவர் தலைமையில் நானும், முதல்நிலை காவலர் சுரேந்திரன் என்பவரும் உதவி ஆய்வாளருக்கு உதவியாக மீனவன்குளம் பகுதியில் ரோந்து சென்றபோது, எங்களுக்கு எதிரே வடக்கிலிருந்து தெற்காக மீனவன்குளம் – காடுவெட்டி சாலையில் பதிவெண் இல்லாத டாடா ஏஸ் வாகனம் வந்ததை நிறுத்தி தணிக்கை செய்தபோது அதில் 1/2 யூனிட் ஆற்று மணல் இருந்தது தெரியவந்தது.

பின்னர் அதனை ஓட்டிவந்த முருகன் என்பவரை விசாரணை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:00:44 +0530

செய்தபோது அவர் கீழகாடுவெட்டி பச்சையாற்றின் பாலத்தின் கீழே ஆற்று மணல் அள்ளிக்கொண்டு வந்ததாக சொன்னார். மேற்படி மணலை எடுப்பதற்கு அவருக்கு அனுமதியோ, உரிமமோ, நடைசீட்டோ எதுவும் இல்லாதது தெரியவந்தது. அதனால் உதவி ஆய்வாளர் அவரை கைது செய்து மேற்படி வாகனத்தையும், அதில் உள்ள 1/2 யூனிட் மணலையும் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் பொதுமக்கள் யாரும் கையொப்பம் இட முன்வராததால் நானும், முதல்நிலை காவலர் சுரேந்திரனும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும். பின்பு கைது செய்யப்பட்ட வழக்கின் எதிரி முருகனுடன், வழக்கின் சொத்துக்களான 1/2 யூனிட் ஆற்றுமணலுடன் கூடிய டாடா ஏஸ் வாகனத்தை களக்காடு காவல்நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண் 67/2016 இதச பிரிவுகள் 379 r/w 21(1)(v) MMDR Act வழக்கு பதிவுசெய்ய உதவியாக இருந்தேன். இதுசம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மீனவன்குளம் என்று தனியாக எந்த ஊரும் கிடையாது என்றும், வடக்கு மீனவன்குளம், தெற்கு மீனவன்குளம் என்றுதான் உள்ளது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த அத்தாட்சியில் எந்த மீனவன்குளத்தில் ரோந்து பணியில் இருந்தோம் என்ற விபரம் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்படவில்லை. வழக்கு சம்பந்தமாக குற்றசம்பவம் நடைபெற்ற இடம் என்ன என்றால் கீழகாடுவெட்டி பச்சையாற்று பாலம் என்றும், மீனவன்குளம் பஸ்ஸ்டாப்பில் வைத்து எந்த வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான். மணல் எடுக்கப்பட்ட இடத்தை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன்.

எத்தனை அடி, நீளம், அகலத்திற்கு மணல் எடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் அவரது இருசக்கர வாகனத்திலும், நானும், அ.சா.1ம் என்னுடைய பைக்கில் சென்றோம். காவல்நிலைத்திலிருந்து எத்தனை மணிக்கு ரோந்துபணிக்கு சென்றோம்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:01:11 +0530

மதியம் 01.00, 01.30 மணிக்கு சென்றோம். நாங்கள் காவல்நிலையத்திலிருந்து நேராக ரோந்துபணிக்கு மீனவன்குளத்திற்கு சென்றோம் என்றால் சிதம்பரபுரத்தை பார்வையிட்டு அதன்பின் மீனவன்குளத்திற்கு இருசக்கர வாகனத்தில் ரோந்துபணிக்கு சென்றோம். இருசக்கர வாகனத்தில் காவல்நிலையத்திலிருந்து சிதம்பரபுரம் சென்றுவிட்டு மீனவன்குளத்திற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 45 நிமிடங்கள் முதல் ஒரு மணிநேரம் ஆனது. நான் ரோந்து பணிக்கு சென்ற விபரங்கள் எனது பாக்கெட் டைரியில் எழுதப்ட்டிருக்கும் என்றால் சரிதான்.

விசாரணையின்போது மேற்படி பாக்கெட் டைரியை உதவி ஆய்வாளரிடம் ஆஜர்படுத்தினேனா என்றால் ஆஜர்படுத்தினேன். மேற்படி பாக்கெட் டைரியை பார்வையிட்டால் நான் ரோந்து பணிக்கு சென்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். கீழகாடுவெட்டி பச்சையாற்று பாலம் செல்லும்பாதையில் தான் கீழகாடுவெட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் மக்கள் வசிக்கும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மீனவன்குளம் பஸ்ஸ்டாப் போக்குவரத்து மிகுந்த பகுதி, மேலும் அருகில் கிராம நிர்வாக அலுவலகம், பள்ளிக்கூடம், வீடுகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும்போது பொதுமக்கள் 20 நபர்கள் சம்பவயிடத்தில் இருந்திருப்பார்கள் என்றால் சரியல்ல 10 நபர்கள் இருந்தார்கள்.

வாகனத்தை கைப்பற்றும்போது வாகனத்துடன் மணல் அள்ளக்கூடிய உபகரணங்கள் இருந்ததா என்றால் இல்லை. எதிரி மணலை திருடவில்லை என்றும் அதனால்தான் வாகனத்தில் எந்த உபகரணமும் இல்லை என்றால் சரியல்ல. அத்தாட்சியை யார் எழுதினார், அத்தாட்சியை எவ்வளவுநேரம் ஆனது என்றால் உதவி ஆயவாளர் எழுதினார், அவர் எழுத 45 நிமிடங்கள் ஆனது. கைப்பற்றப்பட்ட வாகனம் பதிசெய்யப்படாத வாகனமா அல்லது பதிவுஎண் இல்லாத வாகனம் என்றால் பதிவுஎண் இல்லாத வாகனம். மணலுடன் கூடிய வாகனத்தை காவல்நிலையத்திற்கு எப்படி கொண்டுசென்றோம் என்றால் அ.சா.1 வாகனத்தை ஓட்டிவந்தார். மேற்படி வாகனத்தில்தான் நானும் எதிரியும் வந்தோம் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த மணல் திருட்டு சம்பவம் நடைபெறவில்லை என்றும், புள்ளிவிபரகணக்கிற்காக நான்,

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:01:23 +0530

உதவி ஆய்வாளர், அ.சா.1 ஆகியோர் பின்னிட்டு யோசனை செய்து காவல்நிலையத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்தோம் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:01:28 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 317/2017 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 1 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு.சுரேந்திரன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of July 2026.

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டத்திற்கு உட்பட்ட வேம்பார் கடல் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 03.03.2016ம் தேதி களக்காடு காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது சுமார் 14.00 மணியளவில் களக்காடு காவல்நிலைய உதவி ஆய்வாளர் இராஜாராம் தலைமையில் நானும் என்னுடன் களக்காடு காவல்நிலைய காவலர் ஜெனிடன் இஸ்ரவேல் என்பவரும் மீனவன்குளம் பஸ்ஸ்டாப் அருகே ரோந்து சென்றபோது எங்களுக்கு எதிரே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வேகமாக வந்த பதிவெண் இல்லாத டாடா ஏஸ் வாகனத்தை நிறுத்தி தணிக்கை

Digitally signed by BOOMINATHAN
BOOMINATHAN
Date: 2026.07.21 18:01:54 +0530

செய்தபோது வாகனத்தின் பின்பகுதியில் சுமார் 1/2 யூனிட் ஆற்று மணல் இருந்தது.

மேற்படி மணல் பற்றி வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுனரிடம் விசாரித்தபோது மேற்படி ஆற்று மணலை கீழகாடுவெட்டி அருகே உள்ள பச்சையாறு பாலத்திலிருந்து எடுத்துவந்தது தெரியவந்தது. மேற்படி ஓட்டுனர் பெயர் முருகன் என்றும், மேற்படி மணலை காடுவெட்டி பச்சையாற்றின் பாலத்தின் அடியிலிருந்து அரசு அனுமதியோ, உரிமமோ, நடைச்சீட்டோ இல்லாமல் திருடிவந்தது தெரியவந்ததால் மேற்படி நபரை சம்பவயிடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் கைது செய்தும், மேற்படி மணலுடன் கூடிய வாகனத்தை சம்பவயிடத்தில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியும், அந்த அத்தாட்சியில் பொதுமக்கள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸார் எங்கள் முன்பே உதவி ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து அதில் நாங்ள் கையொப்பமிட்டு, மேற்படி எதிரி மற்றும் மணலுடன் கூடிய டாடா ஏஸ் வாகனத்தை களக்காடு காவல்நிலையம் வந்து களக்காடு காவல்நிலைய குற்ற எண் 67/2016 இதச பிரிவுகள் 379 r/w 21(1)(v) MMDR Act வழக்கு பதிவுசெய்ய உதவியாக இருந்தேன்.

இதுசம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மீனவன்குளம் என்று தனியாக எந்த ஊரும் கிடையாது என்றும், வடக்கு மீனவன்குளம், தெற்கு மீனவன்குளம் என்றுதான் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் எந்த மீனவன்குளத்தில் ரோந்து பணியில் இருந்தோம் என்றால் வடக்கு மீனவன்குளத்தில் ரோந்து பணியில் இருந்தோம். வடக்கு மீனவன்குளத்தில் ரோந்து பணியில் இருந்தோம் என்ற விபரத்தை நான் கையொப்பம் செய்த அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. வழக்கு சம்பந்தமாக குற்றசம்பவம் நடைபெற்ற இடம் என்ன என்றால் கீழகாடுவெட்டி பச்சையாற்று பாலம் என்றும், மீனவன்குளம் பஸ்ஸ்டாப்பில் வைத்து எந்த வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான். மணல் எடுக்கப்பட்ட இடத்தை நான் பார்வையிட்டேனா என்றால்

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.21 18:02:00 +0530

பார்வையிட்டேன். எத்தனை அடி, நீளம், அகலத்திற்கு மணல் எடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கீழகாடுவெட்டி, பச்சையாற்றில் எந்த மணலும் எடுக்கவில்லை என்பதால் அதன் அளவு பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் அவரது இருசக்கர வாகனத்திலும், நானும், பட்டியல் சாட்சி2 ஜெனிட்டன் இஸ்ரவேல் அவரது பைக்கில் சென்றோம். காவல்நிலைத்திலிருந்து எத்தனை மணிக்கு ரோந்துபணிக்கு சென்றோம் மதியம் 01.15 மணிக்கு சென்றோம். நாங்கள் காவல்நிலையத்திலிருந்து நேராக ரோந்துபணிக்கு மீனவன்குளத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் காவல்நிலையத்திலிருந்து மீனவன்குளத்திற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 40 நிமிடங்கள் ஆகும். நான் ரோந்து பணிக்கு சென்ற விபரங்கள் எனது பாக்கெட் டைரியில் எழுதப்ட்டிருக்கும் என்றால் சரிதான்.

விசாரணையின்போது மேற்படி பாக்கெட் டைரியை உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். மேற்படி பாக்கெட் டைரியை பார்வையிட்டால் நான் ரோந்து பணிக்கு சென்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். கீழகாடுவெட்டி பச்சையாற்று பாலம் செல்லும்பாதையில் தான் கீழகாடுவெட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். கீழகாடுவெட்டி பச்சையாற்று பாலம் பொதுமக்கள் அதிகம் வசிக்கும் பகுதி என்றால் சரிதான். மீனவன்குளம் பஸ்ஸ்டாப் போக்குவரத்து மிகுந்த பகுதி, மேலும் அருகில் கிராம நிர்வாக அலுவலகம், பள்ளிக்கூடம், வீடுகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும்போது பொதுமக்கள் நிறைய நபர்கள் சம்பவயிடத்தில் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான்.

அத்தாட்சியை யார் எழுதினார் என்றால் உதவி ஆயவாளர் எழுதினார். கைப்பற்றப்பட்ட வாகனம் பதிவுஎண் இல்லா வாகனம் என்றால் சரிதான். மணலுடன் கூடிய வாகனத்தை காவல்நிலையத்திற்கு எப்படி கொண்டுசென்றோம் என்றால் நான் வாகனத்தை ஓட்டிவந்தேன். மேற்படி வாகனத்தில்தான் பட்டியல் சாட்சி–2ம் எதிரியும் வந்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த மணல் திருட்டு சம்பவம் நடைபெறவில்லை என்றும், புள்ளிவிபரகணக்கிற்காக

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:02:08 +0530

நான், உதவி ஆய்வாளர், பட்டியல் சாட்சி–2 ஆகியோர் பின்னிட்டு யோசனை செய்து காவல்நிலையத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்தோம் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:02:13 +0530